TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

C 8044331

1. District / மாவட்டம்: CHENNAI CITY RANGE  PS / காவல்நிலையம்: CITY SPECIAL UNIT-III  Year / ஆண்டு: 2022  FIR No / மு.த.அ. எண்: 01/AC/2022/CC-II  Date / நாள்: 11.02.2022

2. (i) Act சட்டம்: The prevention of Corruption (Amendment) Act, 2018  Sections பிரிவுகள்: 7 (b)
(ii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்:  Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day / குற்ற நிகழ்வு நாள்  Date from / நாள் முதல்: 10.02.2022  Date to / நாள் வரை: 11.02.2022
Time Period / நேர அளவு:  Time from / நேரம் முதல்:  Time to / நேரம் வரை:
(b) Information Received at PS Date / காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள்: 11.02.2022  Time / நேரம்: 13:00 hrs.
(c) General Diary Reference Entry No(s) / பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண்:  Time / நேரம்:

4. Type of Information: Written/ Oral / தகவலின் வகை: எழுத்து மூலம் / வாய் மொழியாக: Typed

5. Place of Occurrence (a) Direction and Distance from PS / குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்: Alandur, Thasildhar Office.
Beat Number / முறைக் காவல் எண்:  (b) Address / முகவரி:
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S / இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர்:  District / மாவட்டம்:

6. Complainant /Informant (a) Name / குற்றமுறையிட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர்: N. Murugan  (b) Father's/ Husband's Name / தந்தை / கணவர் பெயர்: Natesan
(c) Date / Year of Birth / நாள் / பிறந்த ஆண்டு:  (d) Nationality / நாட்டினம்: Indian  (e) Passport No. / வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்:
Date of Issue / வழங்கப்பட்ட நாள்:  Place of Issue / வழங்கப்பட்ட இடம்:
(f) Occupation / தொழில்:  (g) Address / முகவரி: No: 37, Masthan Gori St, Adambakkam, Chennai - 88

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
1. Tr. Saravanan, Thasildhar, Alandur.
2. Tr. kishore, Surveyor, Alandur.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையிட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

9 Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11 Inquest Report / Un-natural death Case No if any
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12 FIR Contents (Attach separate sheet if required)
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம் (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet attached.

13. Action taken Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank ...................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS ..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

Varnith

14 Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15 Date & Time of despatch to the court
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

Name: பெயர் R. Varnikhaa Sree
Rank நிலை Inspector of Police, Vigilance & Anti-corruption Alandur Chennai No எண் ......

Submitted. Today 11.02.2022 at about 12.15 Hrs while I was present at the City Special Unit- III V&AC, complainant Tr. N. Murugesan S/o Natesan No.37, masthan Gori Street, Adambakkam, Chennai – 600088 came to the unit and gave the following complaint which runs as follows

அனுப்புனர், தேதி :11.02.2022. ந.முருகன், த/பெ. நடேசன், எண்.37, மஸ்தான் கோரி தெரு, ஆதம்பாக்கம், சென்னை 88. பெறுநர், உயர்திரு.ஆய்வாளர் அவர்கள், லஞ்ச ஒழிப்புத்துறை, ஆலந்தூர், சென்னை 16. ஐயா, பொருள் : ஆதம்பாக்கம் கிராமம் பழைய சர்வே எண்.179, புதிய சர்வே எண்.179/1, T.S.No.7, partition 7/1 & 7/2 ல் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 22 செண்ட் - எனக்கு சொந்தமான சொத்தின் ஒரு பகுதியை மேற்படி ஆதம்பாக்கம் கிராமம் அரங்கநாதன் மனைவி திருமதி.கஸ்தூரி மற்றும் மகன்கள் பெயரில் முறைகேடாக இருப்பதால் பட்டா மாறுதல் கோரி மனு வழங்கப்பட்டது – அதன் பின் 08.02.2022ந் தேதி என் பெயரில் பட்டா பெயர் மாற்றம் செய்யப்பட்டது - இதற்கு சன்மானமாக ரூ.5 லட்சம் தனி வட்டாட்சியர், கூடுதல் பொறுப்பு வட்டாட்சியர் ஆலந்தூர் வட்டம் மற்றும் நில அளவையர் அவர்கள் கோரியதால் நான் கொடுக்க விருப்பம் இல்லாமல் மேல் நடவடிக்கை எடுக்குமாறு புகார் மனு அளிப்பது சம்மந்தமாக. நான் மேற்படி முகவரியில் வசித்து வருகிறேன். ஆதம்பாக்கம் கிராமம் முன்பு பரமேஸ்வரன் நகர் தற்போது ராமகிருஷ்ணாபுரம் 2வது தெரு, கதவு எண்.9/4ல் T.S.No.7, partition 7/1 & 7/2, Part, Old.S.No 179, புதிய சர்வே எண்.179/1 partitionல் மொத்த விஸ்தீரணம் 1 ஏக்கர் 22 செண்ட் நிலம் உள்ள சொத்தானது எனக்கு சொந்தமானதாகும். மேற்படி சொத்து ஆதியில் திரு.பெருமாள், த/பெ.முத்தையா அவர்களுக்கு அனுபவ பாத்தியம் மூலம் கிடைக்கப் பெற்று தமிழக அரசு நில உடமை (பட்டா பாஸ்புக்) குறிப்பேடுகளில் சைதாப்பேட்டை துணை வட்டாட்சியர் அவர்களால் திரு.பெருமாள் அவர்களின் பெயரை பதிவு செய்து, அவரது அனுபவத்தையும் சுவாதீனதையும் உறுதி செய்து, தொகுப்பு வரிசை எண்.13ல் பட்டா எண்.61 ஆக வழங்கி உள்ளது. மேலும் மேற்படி சொத்தின் ஒரு பகுதியில் வீடு கட்டி வசித்து வந்த திரு.பெருமாள் அவர்கள் கடந்த 03.10.2005 தேதியில் பதிவு பெற்ற ஒரு உயில் சாசனம் மூலம் மேற்படி சொத்தை எனது பெயருக்கு எழுதி வைத்து, கடந்த 19.05.2006 தேதியில் இறந்துவிட்டார். மேற்படி தேதி முதல் மேற்படி உயிலின் சரத்துகளின்படி மேற்படி சொத்து எனக்கு 2013 முதல் கனம் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சியர் அவர்கள் மற்றும் நில அளவை அதிகாரிகள் உத்திரவின்பேரில் ஆர்.டி.ஓ அவர்கள் விசாரணை செய்து கிடைக்க பெற்று இதுநாள் வரையில் எனது அனுபவத்திலும் சுவாதீனத்திலும் இருந்து வருகிறது. அதன்பிறகு நான் எனது நிலத்தை பிறர் ஆக்கிரமிப்பு செய்ய முயல்வதாக 2008ல் சென்னை மத்திய குற்றப்பிரிவில் நான் கொடுத்த புகாரை அவர்கள் முடித்துவைத்துவிட்டதால் நான் அதை

எதிர்த்து ஆலந்தூர் குற்றவியல் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து நிலுவையில் உள்ளது அதன்பின் தாம்பரம் வருவாய் கோட்ட அலுவலர் இச்சொத்தின் மீது விசாரணை செய்து எனக்கு பட்டா வழங்க ஆணையிட்டார். இதன்பிறகு எதிர்தரப்பினர் என்மீது சென்னை மத்திய குற்றப்பிரிவில் 2011ல் புகார் கொடுத்து 2018ல் என் மீது வழக்கு பதிவு செய்து நிலுவையில் உள்ளது. இதை எதிர்த்து நான் சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கை தள்ளுபடி செய்ய மனு செய்து அதன்பேரில் 6 மாதங்களில் வழக்கை முடித்து வைக்க வேண்டும் எனவும் என்னை நீதிமன்றத்தில் குறுக்கு விசாரணைக்கு மட்டுமே காவல் துறை அழைக்க வேண்டும் என்றும், இந்த மனுவில் முருகனுக்கு சாதகமான அம்ச கூறுகள் உள்ளதாக கனம் நீதிபதி அவர்கள் தீர்ப்பளித்தார்கள். இவை அனைத்தும் நிலுவையில் இருந்து வருகிறது. அதன் பின் ஆலந்தூர் தாலுகா பிரிக்கப்பட்டு திரு.சரவணன், சிறப்பு தாசில்தார், கூடுதல் பொறுப்பு தாசில்தார் மற்றும் சர்வேயர் திரு.கிஷோர் ஆகியோர் சேர்ந்து எனது நிலத்தின் சர்வே எண். 2ன் பட்டாவை திருமதி.கஸ்தூரி மற்றும் அவரது மகன்களின் பெயரில் மாற்றி விட்டார். இது சம்மந்தமாக நான் கலெக்டர் அலுவலகம், கனம் முதல்வர் அலுவலகம், RDO அலுவலகத்தில் மனு கொடுத்ததின் பேரில் 08.02.2022 அன்று மாலை எனது பெயரில் தாசில்தார் மாற்றிவிட்டார். அதன்பின் சர்வேயர் திரு.கிஷோர் அவரது உதவியாளர் திரு.சண்முகம் அலைபேசி எண்.9791196686 மூலம் என்னை தொடர்பு கொண்டு ரூ5 லட்சம் நீ கொடுக்க வேண்டும் உடனடியாக பணத்தை எடுத்து கொண்டு உன்னுடைய நிலத்திற்கு வா என்று 10.02.2022ந் தேதியன்று பல முறை அலைபேசியில் தொடர்பு கொண்டார். நான் இதை எனது அலைபேசியில் உள்ள குரல் பதிவு மென்பொருளில் (Voice Recorder) பதிவு செய்தேன். அதன்பின் நான் திரு.கிஷோர் அலைபேசி எண்.6369100716ல் தொடர்பு கொண்டபோது வருவாய் ஆய்வாளர் என்னிடம் பேசி பெரிய பிரச்சனையாக உள்ளது நீ உடனடியாக அந்த இடத்திற்கு வா அல்லது உனது பட்டாவை இதற்கு முன்பு 2013 முன்பு இருந்தது போல் பெயரை மாற்றி விடுவேன் என்று கூறினார். நான் உடனடியாக திரு.சரவணன் அலைபேசி எண்.9384094010 தொடர்பு கொண்டபோது அவர் உடனடியாக மதியம் 2 மணிக்கு என்னை வர சொன்னார். நான் மதியம் சுமார் 1.30 மணியளவில் சென்றபோது திரு.சரவணன் உதவியாளர் என்னை உட்காரும்படியும் ஐயா என்னை அழைப்பதாகவும் கூறினார். திரு.சரவணன் அவர்களும் என்னை உட்காரும்படி கை அசைத்தார். பின்பு வெளியே வந்து நான் கேட்ட ரூ.5 லட்சம் ரெடி பண்ணி விட்டீர்களா என்றும், இதுசம்பந்தமாக அலைபேசியில் பேசாதீர்கள் என்று கூறிவிட்டு அவரது அறைக்குள் சென்றுவிட்டார். அதன்பின் திரு.கிஷோர் மற்றும் வருவாய் ஆய்வாளரும் முதல் மாடியிலிருந்து கீழே இறங்கி வந்து என்னை சந்தித்தார்கள். நான் என்னுடன் எனது நண்பர் திரு.மகேந்திரனையும் அழைத்து

சென்றிருந்தேன். அப்போது சர்வேயர் எனக்கு ரூ.2 லட்சம் மற்றும் ரூ.3 லட்சம் தாசில்தாரிடமும் இப்போதே கொடுத்து விடு என்று கூறினார். தாசில்தார் அவர்கள் சர்வேயரிடம் என்னுடைய பணத்துக்காக சண்டை போட்டு கொண்டு சர்வேயரை தூங்கவிடாமல் பண்ணுகிறார் என்று அவர் கூறினார். மேலும் எனது எதிர் தரப்புதாரர்கள் வருவாய்துறை அதிகாரிகளை மிரட்டுகிறார்கள் என்றும் கூறினார். நான் அவ்வளவு பணம் தற்போது என்னிடம் கைவசம் இல்லை என்றும், மேலும் பணத்தை நான் ரெடி பண்ணுவதற்கு எனக்கு கால அவகாசம் வேண்டும் என்றும் சொன்னேன். அதன்பின் நான் மன உளைச்சலுடன் திரும்பி வந்தபோது எனது நண்பருடைய அறிவுரையின் பேரில் ஆலந்தூர் லஞ்ச ஒழிப்புதுறை அலுவலகத்திற்கு வந்தேன். அப்போது என் அலைபேசியில் பதிவு செய்யப்பட்ட பதிவுகளை அவர்களது கணினியில் பதிவிறக்கம் செய்து, ரூ.5 லட்சம் கேட்டதற்கான ஒலி ஆதாரத்தை கேட்டார்கள். அதன்பின் மாலையில் வீடு சென்றுவிட்டேன். இன்று 11.02.2022ந் தேதி காலை சுமார் 12.30 மணிக்கு திரு.கிஷோர் சர்வேயர் என்னை எனது அலைபேசி எண்.7338972536 ல் அழைத்து உடனடியாக பணத்தை எடுத்து கொண்டு வா என்று கூறினார். நான் பணம் கொடுக்க விரும்பாததால் என்னிடமிருந்த ரூ.500/- நோட்டுதாள் ரூ.50,000/-த்தை எடுத்து கொண்டு லஞ்ச ஒழிப்பு துறையில் வந்து தங்களிடம் புகார் அளித்தேன். எனவே தாங்கள் சமூகம் சம்மந்தப்பட்ட அதிகாரிகள் மீது தக்க மேல்நடவடிக்கை எடுக்குமாறு தாழ்மையுடன் கேட்டு கொள்கிறேன். தங்கள் உண்மையுள்ள sd N.Murugan.

Respected Madam,

The above compliant was received and based on that, the authenticity, genuineness of the Complainant and the antecedents of the accused were checked. A confidential enquiry regarding the compliant were made and prima-facie made out. A FIR in V&AC Cr.No.01/AC/2022/CC-II U/s 7 (b) of the Prevention of Corruption (Amendment) Act 2018 was registered today on 11.02.2022. FIR sent to the Hon'ble Chief Judicial Magistrate Court cum Special Judge at Chengalpet and took up for investigation.

11-02-2022

Inspector of Police
No.293, M.K.N.Road
Alandur, Chennai-600 016
City Special Unit III